07.04.2025
Election OP. No. 164/2022
**ம.சா.1 – தாமோதரன்**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். இந்த வழக்கை நான் 2–ஆம் எதிர்மனுதாரர் தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். வேட்பு மனு தாக்கல் தேதி 28.01.2022 லிருந்து 04.02.2022 ஆகும். 11–ஆவது வார்டுக்கு ஏழு பேர் வேட்பு மனு தாக்கல் செய்தார்கள், இருவர் வாபஸ் பெற்றுக்கொண்டார்கள். அந்த வேட்பு மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பரிசீலனை முறையாக நடந்ததா என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. 11 ஆவது வார்டில் வேட்பாளர் பட்டியல் பரிசீலனையின்போது, 2 ஆம் எதிர்மனுதாரர்மீது குற்ற வழக்கு இருக்கிறது என்று, யாராவது ஆட்சேபனை தெரிவித்தார்களா என்றால், அவர்மீது குற்றவழக்கு இருப்பது யாருக்கும் தெரியாது அதனால், ஆட்சேபனை செய்யவில்லை. முதன்முதலாக அவர்மீது குற்றவழக்கு இருப்பதாக நீதிமன்றத்தில்தான் தெரிவிக்கிறேன் என்றால் சரிதான்.

**(குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி நிறுத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.